| | |
|---|---|
| 12—5—1986 (திங்கட்கிழமை) 13—5—1986 (செவ்வாய்க்கிழமை) | அரசினர் சட்டமுன் வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் மற்றும் பிற அரசு அலுவல்கள். |

(பேரவை காலையிலும் மாலையிலும் கூடும்).

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (2—5—1986) மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6.41 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 6—3—1986 ஆம் நாளிட்ட 339 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

73. தமிழ்நாடு அரசு பற்றிய இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான (வருவாய் வரவினங்கள்) அறிக்கை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது (ஆங்கிலம்).

74. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1984—85 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

151. 1986–87 ஆம் ஆண்டிற்கான பாசனம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான நீர்ப் பாசனத்துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).